

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | டிசம்பர் 09, 2021 | புரட்சி 20 | முழக்கம் 41 | விலை: ரூ.3.00


## நூல் வெளியீட்டு விழாவில் ஆ. ராசா முழக்கம்

# காவிகளின் இந்துத்துவ அரசியலை முறிக்கும் ஒரே மாமருந்து பெரியார் மட்டுமே!

***கருஞ்சட்டைப் பதிப்பகம் சார்பில் நூல் வெளியீட்டு விழாவில் பேசிய தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர், பெரியார் ஒருவர் மட்டுமே நமக்கு வழி காட்டுகிறார். அவரது தத்துவங்களால் மட்டுமே காவி மயமாக்கும் முயற்சியை முறியடிக்க முடியும் என்று குறிப்பிட்டார்.***

நாட்டையே காவி மயமாக்கிட வேண்டும் என்று தீவிரமாக அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தி வரும் ஒன்றிய ஆட்சியை வீழ்த்த நம்மிடம் உள்ள ஒரே மாமருந்து பெரியார் மட்டும் தான். அம்பேத்கரை கூறலாம் என்றால் அவரையும் ‘இந்துத்துவா’ தனக்குள் இழுத்துக் கொண்டு ‘இந்துத்துவா அம்பேத்கர்’ என்று பேசி வருகிறது. பெரியார் என்ற நெருப்பை மட்டும் தான் அவர்களால் பொட்டலம் கட்ட முடியவில்லை என்று நாடாளு மன்ற உறுப்பினரும் தி.மு.க.வின் துணைப் பொதுச் செயலாளருமான ஆ.ராசா குறிப்பிட்டார்.

கருஞ்சட்டைப் பதிப்பகம் வெளியிட்டுள்ள மூன்று நூல்களின் வெளியீட்டு நிகழ்வு சென்னை இராஜரத்தினம் முத்தமிழ்ப் பேரவை அரங்கில் டிச.4, 2021 மாலை 6.30 மணியளவில் நடைபெற்றது. திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி எழுதிய ‘மார்க்சியமும் பெரியாரும்’, பேராசிரியர் சுப. வீரபாண்டியன் எழுதிய ‘இடதுசாரித் தமிழ்த் தேசியம்’, ப. திருமாவேலன் எழுதிய ‘திரும்பத் திரும்ப திராவிடம் பேசுவோம்’ என்ற மூன்று நூல்களையும் ஆ. ராசா வெளியிட, மாநில வளர்ச்சி கொள்கைக் குழு துணைத் தலைவர் ஜெயரஞ்சன் பெற்றுக் கொண்டார்.

நூல்களை வெளியிட்டு ஆ. ராசா பேசும்போது, “தமிழ் மொழியை கடவுளிடமிருந்தும் மதத்திடமிருந்தும் பிரித்து, அறிவியல் மொழியாக்கி சமுதாய வளர்ச்சிக்குப் பயன்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு பெரியார் தமிழைக் ‘காட்டுமிராண்டி’ மொழி என்றார். தமிழைக் கடவுளோடும், மதத்தோடும் இணைக்கும் காவிக் கூட்டம் பெரியாரை தமிழுக்கு எதிரி என்கிறது. 1984இல் ஒன்றிய அரசு நடத்திய சமஸ்கிருத மாநாட்டில் பங்கேற்ற ம.பொ.சி., தன்னை இந்து, இந்தியன் என்று கூறிக் கொண்டு ‘சமஸ்கிருதமே நமது பண்பாட்டு மொழி; இந்திய மொழிகள் அனைத்துக்கும் அதுவே தாய்’ என்று பேசியிருப்பதை அவரே தொகுத்து நூலாக வெளியிட்டிருக்கிறார். அந்த ம.பொ.சி.யை சில தமிழ் தேசியர்கள் தூக்கிப் பிடிக்கிறார்கள். இப்போது ‘தமிழ் இந்து’ பேசும் நிலைக்கு சில தமிழ் தேசியர்கள் வந்து விட்டார்கள். கலைஞர்கூட ம.பொ.சி.க்கு பெருந்தன்மையாக சிலை வைத்தார். இனி எங்கள் ஆட்சியில் அவை எல்லாம் நடக்காது. இது போன்றவர்களுக்கு இனி சிலை கிடையாது; இன்றைய முதல்வர் பெருந்தன்மையாக அப்படி நடக்க முயற்சித்தாலும் நாங்கள் விட மாட்டோம்” என்று பலத்த கரவொலிக்கிடையே அறிவித்தார்.

தமிழ் மொழியைச் சூழ்ந்திருந்த புராணம், இதிகாசப் புரட்டுகளிலிருந்து தமிழை மீட்டெடுத்து உள்ளே இருந்த மாணிக்கத்தை வெளிக்கொண்டு வந்தவர் பெரியார். அவரது மொழிக் கொள்கை தான் திராவிட இயக்கத்தின் மொழிக் கொள்கை. திராவிட இயக்கம், இராமாயணத்தையும் மகாபாரதத்தையும் அதே கண்ணோட்டத்தில் தான் எதிர்த்தது என்று விளக்கினார் ஆ.ராசா.

1937இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்க மறைமலை அடிகளுக்கு அழைப்பு விடுத்து பெரியார் எழுதிய அந்தக் கடிதம் மிகச் சிறப்பானது. அதை ஒவ்வொருவரும் படிக்க வேண்டும். அதே போல நாகம்மையார் மறைவையொட்டி பெரியார் மிக உருக்கமாக எழுதினார். “நாகம்மையார் மறைவு எனக்கு விடுதலை தந்து விட்டது” என்று பெரியார் எழுதிய கடிதத்தை எனது மனைவி இறந்தபோது நான் மீண்டும் மீண்டும் படித்தேன் என்று நினைவு கூர்ந்தார்.




‘நீராடுங் கடல் உடுத்த’ என்று கலைஞர் அரசு விழக்களுக்காக அறிமுகப் படுத்திய தமிழ்த் தாய் வணக்கத்தைக் கூட பெரியார் ஏற்கவில்லை. “கடவுள் வாழ்த்துக்கு பதிலாக தமிழ்த் தாய் வாழ்த்தா? இது இரட்டை மூடத்தனம்” என்றார் பெரியார். இதை கலைஞரிடம் கூறியபோது அப்படி சொல்வதால் தான் அவர் பெரியார் என்றார்.

ஒரு முறை திருச்சியிலிருந்து சென்னை வரும் வரை நானும் அண்ணன் துரைமுருகனும் கலைஞருடன் காரில் வந்தபோது, புலவர் கீரன், இராமாயண உரையின் 8 கேசட்டுகளையும் கலைஞர் கேட்டார். கடைசியில் சென்னையில் காரை விட்டு இறங்கியபோது ஒரு சினிமாப் படம் பார்த்ததுபோல் இருந்தது. ஒரு கருத்தும் இல்லை என்று ஒரே வரியில் கூறினார் என்ற தகவலைப் பகிர்ந்து கொண்டார்.

கொளத்தூர் மணி அவர்கள் எழுதிய ‘மார்க்சியமும் பெரியாரும்’ என்ற இந்த நூல் பெரியார் குறித்த நுணுக்கமான செய்திகளைப் பதிவு செய்கிறது. மார்க்ஸ் எழுதிய மூலதனம் நூலில், “பார்ப்பனரையும் பசுவையும் காப்பாற்றுவதற்காக, ‘சூத்திரன்’ தியாகம் செய்ய வேண்டும். அதுவே மோட்சம் போவதற்கான வழி என்று நினைத்துக் கொண்டிருக்கிறான்” என்று எழுதியிருப்பதை எடுத்துக் காட்டுகிறார். 150 ஆண்டுகளுக்கு முன்னால் எங்கோ இருக்கிற காரல்மார்க்சுக்கு தெரிந்த இந்த உண்மை இங்குள்ள கம்யூனிஸ்ட்டுகளுக்கு தெரியாமல் போய் விட்டது. நான் இதுவரை அறிந்திடாத மற்றொரு தகவலை கொளத்தூர் மணி பதிவு செய்துள்ளார். வைசிராய் கவுன்சில் உறுப்பினர், திருவாங்கூர் திவான் போன்ற பதவிகளை வகித்த சி.பி. இராமசாமி அய்யர், ‘இந்து மதம் இங்கே இருக்கிறவரை, அரையடி சாமி சிலை இருக்கிறவரை இங்கு கம்யூனிசம் வந்து விடாது’ என்று கூறியிருக்கிறார். ஆனால், நமது நாட்டுக் கம்யூனிஸ்டுகள், இந்து மத எதிர்ப்பைப் பேசவில்லை; இப்போது தான் ஜாதிப் பிரச்சினை, இந்து மதப் பிரச்சினை பற்றியெல்லாம் சிந்திக்கத் தொடங்கி இருக்கிறார்கள். ‘2ஜி’ குற்றச்சாட்டு என் மீது வந்த போது, ஊழல் நடந்து விட்டது என்று நாடாளுமன்றத்தில் மற்ற எதிர் கட்சிகளுடன் சேர்ந்து கலாட்டா செய்தார்கள், கம்யூனிஸ்ட்டுகள். ‘நான் செய்தது புரட்சியா, ஊழலா’ என்பது வழக்கின் தீர்ப்பு வரும்போது உங்களுக்குப் புரியும் என்று சீத்தாராம் எச்சூரியிடம் கூறினேன். இப்போது தீர்ப்புக்குப் பிறகு எச்சூரியைப் பார்த்தபோது இப்போதாவது புரிந்ததா என்று கேட்டேன். ஆமாம், நீங்கள் சொன்னது உண்மை தான் என்றார். இங்கேயுள்ள ஜாதி, மதப் பிரச்சினைகளை இரண்டு கம்யூனிஸ்டுகளும் கவனத்தில் எடுத்துக் கெள்ளாத காரணத்தால் இன்று நாடாளுமன்றத்தில் 7 உறுப்பினர்களோடு அவர்கள் முடங்கியிருக்கிறார்கள் என்றார் ஆ.ராசா.

இதே சர். சி.பி. இராமசாமி அய்யர், திருவாங்கூர் சமஸ்தானத்தை, பாகிஸ்தானுடன் இணைக்க முடிவு செய்து, ஜின்னாவை சந்தித்தவர். அவரை இந்திய ஒருமைப் பாட்டுக் குழுவில் உறுப்பினராக நேரு நியமித்தபோது, அண்ணா, திருவாங்கூரை பாகிஸ்தானோடு இணைக்கத் துடித்தவர்தான் உங்களுக்கு இந்தக் குழுவில் போடுவதற்கு கிடைத்தாரா என்று நேருவிடம் கேட்டார்.

பெரியார் தனித் தமிழ்நாடு கொள்கையில் உறுதியாக இருந்தார். இந்து மதம் இருக்கும் வரைஜாதி ஒழியாது என்றார். இதைச் சொன்னால், நாடாளு மன்ற உறுப்பினர் தனித் தமிழ்நாடு பேசுகிறார் என்று துள்ளிக் குதிப்பார்கள். நாங்கள் பூகோள ரீதியாக தனித் தமிழ்நாடு கேட்கவில்லை. அப்படி கேட்டாலும் தவறு இல்லை. அது வேறு, ஆனால், புத்தி ரீதியாக தனித் தமிழ்நாட்டு கொள்கைக்கான தீயை அணையாது பாதுகாத்துக் கொண்டிருக் கிறோம்.

நீங்களே கூறுங்கள்; நாடாளுமன்றம் என்ற மக்கள் சபை, விவசாய சட்டங்களைக் கொண்டு வந்து தீர்மானம் நிறைவேற்றிய பிறகு தமிழ்நாடு சட்டமன்றமான மக்கள் மன்றம், அதை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றியது. குடியுரிமை சட்டத்தை, ‘நீட்’ தேர்வை எதிர்த்து நாடாளுமன்றத் தீர்மானங்களை புறந்தள்ளி தமிழ்நாடு சட்டமன்றம் தீர்மானம் போட்டது. இந்தியாவில் வேறு எந்த மாநில சட்டமன்றமாவது இப்படித் தீர்மானம் போட்டிருக்கிறதா? பூகோள ரீதியில் தமிழ்நாடு கேட்காமல், புத்தி ரீதியாக அந்த கொள்கை உணர்வை முன் வைக்கிறோம்; இது பெரியார் தந்த புத்தி.

நாடாளுமன்றத்திலே பிற மாநில உறுப்பினர்கள் என்னிடம் கேட்டார்கள், எப்படி உங்கள் மாநிலத்திலிருந்து 40 உறுப்பினர்கள் தேர்வு செய்யப் பட்டீர்கள்? இது எப்படி சாத்தியம் என்று கேட்டபோது, நான் ஒவ்வொரு உறுப்பினரின் பெயரையும் கேட்டேன். பெயருக்குப் பின்னால், பாண்டே, சாட்டர்ஜி, மிஸ்ரா, சர்மா எனறு ஜாதிப் பெயர்களோடு இணைத்துக் கூறினார்கள். எங்கள் 40 நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயருக்குப் பின்னால், ஜாதிப் பெயர் இருக்கிறதா, ஒருவர் பெயரிலும் கிடையாது. பெயர் அளவிலாவது நாங்கள் ஜாதியை ஒழித்துக் கட்டியிருக்கிறோம். இது திராவிட இயக்க சாதனை. அந்தக் கொள்கை தான் எங்களுக்கு இவ்வளவு பெரிய வெற்றியைத் தந்திருக்கிறது என்றேன். (பலத்த கைதட்டல்)

அம்பேத்கர், பார்ப்பனியத்தை எதிர்த்தார்.

(4ஆம் பக்கம்)

### ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ ஆண்டுக் கட்டணம் ரூ.250 ஆக உயர்வு

காகித விலை, அச்சுக்கான செலவுகள் அதிகரித்து விட்டதால், ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ ஆண்டுக் கட்டணம் ரூ.250/- ஆக தவிர்க்க இயலாத நிலையில் உயர்த்தப்படுகிறது. வாசகர்கள் தொடர்ந்து ஆதரவை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**– நிர்வாகி, ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’**

# எது தமிழ்ப் புத்தாண்டு? நாரதனும்-கிருஷ்ணனும் கூடிப் பெற்ற 60 சமஸ்கிருத ஆண்டுகளா? அல்லது திருவள்ளுவரைக் கொண்டாடும் ஆண்டுகளா?

*தமிழர் திருநாளையொட்டி தமிழக அரசு வழங்கும் உணவுப் பொருள்களுக்கான பைகளில் பொங்கல் திருநாள் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகள் என்ற சொற்றொடர் இடம் பெற்றுள்ளது. உடனே பா.ஜ.க. தை முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டாக மாற்றுவதா என்று ஆர்ப்பரிக்கிறது. அ.அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ. பன்னீர்செல்வம், சித்திரை முதல் நாள் தான் தமிழ்ப் புத்தாண்டு மாற்றக் கூடாது என்கிறார். அரசியலுக்குள் கால் பதிக்கத் துடிக்கும் சசிகலாவும் இதே குரலை ஒலித்திருக்கிறார். 2008ஆம் ஆண்டு கலைஞர் தை முதல் நாள் தான் தமிழ்ப் புத்தாண்டு என்று அறிவித்தார். அடுத்து ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா – கலைஞர் ஆட்சி பிறப்பித்த ஆணையை நீக்கம் செய்து சித்திரை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என்று அரசு சார்பில் உத்தரவிட்டார்.*

*உண்மையில் தமிழ்ப் புத்தாண்டு தமிழர்களை தை முதல் நாள் தான் கடைபிடிக்கப்பட்டு வந்தது. பிறகு எப்படி சித்திரைக்கு மாறியது என்பதற்கு வரலாறு இருக்கிறது.*

முன் காலத்தில் வருடப் பிறப்புச் சித்திரை முதல் நாளாக இருந்ததில்லை. தை முதல் நாளைத் தான் வருடப் பிறப்பாகப் பெரியோர்கள் கொண்டாடினார்கள். அந்த நாள் முதல் எல்லோருடைய வாழ்வும் பல வகையிலும் புதிய வாழ்வாக இருக்க வேண்டும் என்று ஏற்படுத்தினார்கள். உண்ணுவதிலும் புதுமை, உடுப்பதில் புதுமை, வீட்டில் புதுமை, மனதிலும் புதுமை, புதிய பச்சரிசியை பொங்குவார்கள். புதிய ஆடைகளை வாங்கி உடுப்பார்கள். வீட்டுக்கு வெள்ளை அடித்து அழகு செய்வார்கள். தெருவில் புது மண் போட்டு, செம்மண் இட்டு, ஒழுங்கு செய்வார்கள். ஊரெல்லாம் திருவிழா நடத்துவார்கள். இப்படி நகரங்களில் புத்தாண்டு பிறப்பாக பொங்கல் கொண்டாடுகிறார்கள்."

தை முதல் நாள் தான் தமிழர்களுக்கு புத்தாண்டாக இருந்தது என்பதை நடைமுறை உதாரணங்களோடு இப்படி விளக்கிக் காட்டியுள்ளவர் டாக்டர் மு. வரதராசனார்.

பழந்தமிழர்கள் தங்களது அறிவுக்கு உகந்தவாறு காலங்களைக் கணித்தார்கள். ஒரு ஆண்டை தமிழன் ஆறு பருவ காலமாகப் பிரித்தான். இளவேனில் (தை மாசி), முதுவேனில் (பங்குனி, சித்திரை), கார் (வைகாசி, ஆனி), கூதிர் (ஆடி, ஆவணி), முன்பனி (புரட்டாசி, அய்ப்பசி), பின் பனி (கார்த்திகை மார்கழி). தமிழன் தன் வாழ்வை இளவேனிற் காலத்தில் தொடங்கினான். இதையே ஆண்டின் துவக்கமாகக் கொண்டான். எனவே தை மாத முதல் நாளே ஆண்டின் துவக்கமாகக் கொண்டான். இவை தை முதல் நாளே தமிழர்களுக்கான புத்தாண்டு என்பதற்கான வாழ்வியல் காரணங்கள்.

தமிழர்களின் காலக் கணக்கீட்டைக் கொண்டும், இந்தக் கருத்தை நியாயப்படுத்த முடியும். காலக் கணக்கீட்டிற்கு அடிப்படையாக இருப்பது சூரியன்தான். பகல், இரவு, நாள், கிழமை, பருவம், ஆண்டு எல்லாமே சூரியன் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டே கணக்கிடப்படுகின்றன. சூரியனைச் சுற்றி பூமியும், மற்ற கோள்களும் சுற்றினாலும், பூமியில் உள்ளவர்கள் பார்வையில் சூரியன் காலையில் எழுகிறது. மாலையில் மறைகிறது. சந்திரன் தேய்கிறது, வளர்கிறது. நட்சத்திரங்களின் இருப்பிடங்கள், கோள்களின் நிலைகள்... மனிதர்களின் பார்வையில் மாறுகின்றன. இந்தப் பார்வையில் தெற்கே சென்ற சூரியன், வடக்கு நோக்கித் திரும்புகிற நாள் தை முதல் நாளாக, புத்தாண்டின் துவக்கமாகத் தமிழர்களால் ஏந்தப்பட்டது. சூரியன் வடக்கு நோக்கித் திரும்புவது தான் தமிழர்கள் வாழும் பகுதியில் நிகழ்வதால் தமிழர்கள், தங்களின் வானியல் கணிதப்படி அதுவும் தை மாதத்தில் நிகழ்வதால் தமிழ் மக்கள் தை முதல் நாளை தமிழர் புத்தாண்டாக ஏற்றுக் கொண்டிருந்தனர்.

தமிழர்கள் வகுத்துக் கொண்ட வானியல் கணிப்பின்படி, தை முதல் நாளே தமிழ் புத்தாண்டாக இருந்திருக்கிறது. ஆனால் அறிவியல் கண்ணோட்டத்தில் சூரியன் உதயமாவதும் இல்லை, மறைவதும் இல்லை. அது என்றும் ஒளிர்கிறது. பூமி, தற்சுழற்சியாக சூரியனை சுற்றி வரும்போது 24 மணி நேரத்தில் சூரிய ஒளிபடுகிற இடமெல்லாம் பகலாகவும், மறுபகுதி இரவாகவும் அமைகிறது.

தமிழர் கொண்டாடியதை புத்தாண்டு, சித்திரைக்கு மாறியது எப்படி? குப்தர் வம்சத்தில் வந்த இரண்டாம் சந்திர குப்தன் தனது பெயரை விக்கிரமாதித்தன் என்று மாற்றிக் கொண்டு – தனது பெயரால் 'விக்கிரம சகம்' என்ற ஆண்டு முறையை உருவாக்கிக் கொண்டான். வானவியலை அறிவியல் கண்ணோட்டத்தில் ஆராய்ந்த ஆரியபட்டருக்கு எதிராக வானவியலில் – சாதகம், சோதிடத்தைப் புகுத்தும் முயற்சிகள் அவனது காலத்தில் மேற்கொள்ளப்பட்டன. எனவே வானியல் சிந்தனையாளர் ஆரியபட்டர் புறக்கணிக்கப்பட்டு, பழமையில் ஊறியவரான மிகிரர் உயர்த்திப் பிடிக்கப்பட்டார். அப்படி விக்கிரமாதித்தன் உருவாக்கிய 'விக்கிரமசகம்' எனும் ஆண்டு முறையில் சித்திரை முதல் நாளே ஆண்டின் முதல் நாளாக்கப்பட்டது. 'விக்கிரம சகம்' 60 ஆண்டுகளை வரையறுத்தது. 'பிரபவ' ஆண்டில் தொடங்கி 'அட்சய' ஆண்டில் முடியும். இவைகளில் ஒரு பெயர்கூட தமிழ் இல்லை. 60 ஆண்டுகளுக்கும் வடமொழிப் பெயர்கள்தான். ஆனால், தமிழர்கள் தமிழ்ப் புத்தாண்டாக கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் வேடிக்கை – வேதனை.

இந்த 60 ஆண்டுகளையும் கடவுளோடு தொடர்புபடுத்தி, ஆபாசம் வழியும் கதைகளையும் உருவாக்கி விட்டார்கள். நாரதரும், கிருஷ்ணனும் உறவு கொண்டு (இருவரும் ஆண்கள்) பெற்ற குழந்தைகளே 'பிரபவ முதல் அட்சய முடிய 60 ஆண்டுகள்' என்று தமிழ்க் கலை களஞ்சியமான 'அபிதான சிந்தாமணி' கூறுகிறது. இதற்கு புராண ஆதாரங்கள் வேறு உள்ளன. இந்த 60 ஆண்டுகளுக்கு மேல் 61வது ஆண்டைக் குறிக்கப் பெயர் இல்லை. மீண்டும் 'பிரபவத்திலிருந்து தான் தொடங்க வேண்டும்' நடைமுறைக்கும் அறிவுக்கும் ஒவ்வாத குழப்பங்களும், மூடநம்பிக்கைகளும் இதில் அடங்கிக் கிடக்கின்றன.

இந்த நிலையில் தான் – தமிழ் அறிஞர்கள் 1921-ம் ஆண்டு சென்னை பச்சையப்பன் கல்லூரியில் கூடி ஆராய்ந்தார்கள். மூன்று முக்கிய முடிவுகளை அவர்கள் அப்போது எடுத்தார்கள்.

1. திருவள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டாகப் பின்பற்றுவது.
2. அதையே தமிழ் ஆண்டு எனக் கொள்வது.
3. திருவள்ளுவர் காலம் கி.மு. 31 (வழக்கில் உள்ள ஆங்கில ஆண்டுடன் 31-ஐக் கூட்டினால் திருவள்ளுவர் ஆண்டு)

திருவள்ளுவர் ஆண்டுக்கு முதல் மாதம் தை இறுதி மாதம் மார்கழி. புத்தாண்டுத் தொடக்கம் தை முதல் நாள். கிழமைகள் வழக்கில் உள்ளவை என்று முடிவெடுத்தார்கள். இப்படி முடிவெடுத்தவர்கள் தமிழகத்தின் மூத்த தமிழ் அறிஞர்கள் மறைமலை அடிகள், திரு.வி.க., சுப்பிரமணியப் பிள்ளை, சச்சிதானந்தப் பிள்ளை, ந.மு. வேங்கடசாமி நாட்டார், நாவலர் சோம. சுந்தர பாரதியார், கி.ஆ.பெ. விசுவ நாதம் ஆகியோர் ஆவர்.

அதன் பிறகு 1939 ஆம் ஆண்டு திருச்சியில் 'அகில இந்திய தமிழர் மாநாடு' சோமசுந்தர பாரதியார் தலைமையில் கூடியது. அதில் தந்தை பெரியார், கரந்தை தமிழ்ச்சங்கத் தலைவர் உமா மகேசுவரனார், பேராசிரியர் கா. சுப்பிரமணியம், தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், திரு.வி.க., மறைமலையடிகளார், பி.டி.இராஜன், ஆற்காடு இராமசாமி முதலியார், புரட்சி கவிஞர் பாரதிதாசன், பட்டுக்கோட்டை அழகிரி உட்படப் பலரும் பங்கேற்றனர். அந்த மாநாடும் தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என்றும், பொங்கல் திருநாளே தமிழர் திருநாள் என்றும் பறைசாற்றியது.

1971-ல் அன்றைய கலைஞர் ஆட்சி, திருவள்ளுவர் ஆண்டு முறையை ஏற்றது. இம்முறையையே 1971 முதல் அரசு நாட்குறிப்பிலும், 1972 முதல் அரசிதழிலும், 1981 முதல் அரசின் அனைத்து அலுவல்களிலும் பின்பற்றி வருகிறது. 1969-ம் ஆண்டு கலைஞர் ஆட்சி பொங்கல் திருநாளுக்கு அடுத்த நாளை திருவள்ளுவர் நாள் என்று ஏற்று அரசு விடுமுறை அளித்து ஆணை பிறப்பித்தது. எனவே தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு ஆகும். இடையில் வந்து புகுந்த சித்திரை – தமிழர் மீது புகுத்தப்பட்ட பண்பாட்டுத் திணிப்பாகும்

60 ஆண்டுகளும் சமஸ்கிருதப் பெயரைச் சுமந்து கொண்டிருக்கிறது, சித்திரையில் தொடங்கும் தமிழ்ப் புத்தாண்டு. இதற்கு மாறாக, தமிழ்ப் புத்தாண்டுக்கு என் கணிதப்படி திருவள்ளுவர் பிறப்பை முன் வைத்து கொண்டாடப்படுகிறது – தை முதல் நாளாகக் கொண்டாடப்படும் தமிழ்ப் புத்தாண்டு.

நாரதனும் கிருஷ்ணனும் கூடிப் பெற்றதாகப் புராணம் கூறும் 60 சமஸ்கிருத ஆண்டை தமிழ்ப் புத்தாண்டு என்கிறது பா.ஜ.க.வும் அதன் ஊதுகுழலான அ.இ.அ.தி.மு.க.வும்.

தமிழுக்கு பெரியார் எதிரி போலவும், தாங்களே தமிழின் காவலர்களாகவும் 'புதிய வேடம் போட்ட' பா.ஜ.க.வினர், இப்போது தங்கள் அடையாளம் எது என்பதைக் காட்டி விட்டார்கள்.

# தமிழ்நாட்டில் தமிழ் தெரியாதவர்களுக்கு இனி வேலை வாய்ப்பு கிடையாது: தி.மு.க. அரசின் பாராட்டத்தக்க உத்தரவு

தமிழ்நாடு அரசின் அரசாணை ஒன்று 03.12.202 அன்று பிறப்பிக்கப்பட்டது. அந்த அரசாணையை அனைவரும் பாராட்டி வரவேற்கிறார்கள். இனி தமிழ்நாட்டில் அனைத்து போட்டித் தேர்வுகளிலும், அரசு நடத்துகிற தேர்வுகளிலும், தமிழ் மொழித் தாளில் ஒருவர் கட்டாயம் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அதில் 40% மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். 10ஆம் வகுப்பு அடிப்படையில் இந்தத் தேர்வுத் தாள் இருக்கும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்திருக்கிறது. தமிழ் வழிக் கல்வி அல்லது தமிழ்நாட்டில் உள்ள அரசு வேலைகளில் தமிழ் தெரிந்தவர்கள் கட்டாயம் இருக்க வேண்டும் என்ற உத்தரவின் வழியாக வேலை வாய்ப்புகள் 100% இனி தமிழ்நாட்டு இளைஞர்களுக்கே கிடைக்கும் வாய்ப்பு உருவாகி இருக்கிறது.


தமிழ்நாட்டில் பணி செய்வோர் தமிழில் பேச எழுத தெரிந்திருப்பது அவசியமாகிறது என்ற அடிப்படையில் இந்தத் தகுதித் தேர்வு வேலை வாய்ப்புக்கு முன் நிபந்தனையாக்கப் பட்டுள்ளது.

ஏற்கெனவே அரசு பள்ளிகளில் படிப்பவர்களுக்கு முன்னுரிமை, தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பிற்படுத்தப் பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீடு என்ற சட்டங்கள் உள்ள நிலையில், இந்தப் புதிய அரசாணைகளும் இணைகிற போது சமூகநீதியின் களம் விரிவடைகிறது. நகரங்களில் இருந்து கிராமங்களுக்கும் சமூகநீதித் தளம் விரிவடைந்து மிகுந்த பயனை உருவாக்குகிற சமூகநீதிச் சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே ஓ.பன்னீர் செல்வம் முதலமைச்சராக இருந்த போது ஒரு விபரீத ஆணையை பிறப்பித்தார். தமிழ்நாட்டில் தமிழ் தெரியாதவர்கள் கூட தமிழ்நாட்டு அரசு வேலைகளில் சேர முடியும் என்று தமிழ்நாட்டு அரசு தேர்வாணையத்தில் திருத்தம் ஒன்றை அவர் கொண்டு வந்தார். இதன் வழியாக தமிழ் தெரியாத பலர் தமிழ்நாட்டு இளைஞர்களின் வேலை வாய்ப்பை பறித்து விட்டார்கள்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தாங்கள் தமிழில் தேர்ச்சிப் பெற்று விட்டதாகவும் பொய்யான சான்றிதழ்களை வழங்கி தங்களுடைய வேலைகளைப் பாதுகாத்துக் கொண்டனர். தற்போதைய அரசுத் தேர்வாணையம் அவைகளைக் கண்டறிந்து இந்த மோசடிகளை அகற்றி வருகிற வேலைகளையும் செய்து வருகிறது.

அரசினுடைய இந்த உத்தரவு தமிழ் நாட்டில் திராவிட இயக்கம் தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஏதும் செய்யவில்லை என்று கூப்பாடு போட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு ஒரு பதிலாகவும் அமைந்திருக்கிறது. தமிழ்த் தேசியம் என்று சொல்லிக் கொண்டு திராவிட எதிர்ப்பை பேசிக் கொண்டிருப்பவர்கள் தமிழ்நாட்டு அரசின் இந்த உத்தரவுகளை வரவேற்பார்களா ? அல்லது மவுனம் சாதித்து கடந்து போவார்களா ?

## தமிழில் இருந்து பிரி!



தமிழ் மன்னர்கள் ஆரிய மதத்தை ஏற்றுக் கொண்டதால் அம்மதக் கருத்துக்களை விளக்கத் தமிழில் சொற்கள் இல்லாது போகவே அதிகமாக வடமொழிச் சொற்களை கையாள ஆரம்பித்தனர். "தமிழிலிருந்து சைவத்தையும், ஆரியத்தையும் போக்கி விட்டால் தம்மை அறியாமலேயே நமக்கு பழந்தமிழ் கிடைத்து விடும். மதத்திற்கு ஆதாரமா யிருந்து வருவனவெல்லாம் வட மொழி நூல்களே ஒழிய, தமிழ்மொழி நூல்களில் தற்சமயம் நம் நாட்டில் இருந்து வரும் மதத்திற்கு எவ்வித ஆதாரமும் இல்லையென்பது இங்கு கவனிக்கத் தக்கது"

**மொழி எழுத்து நூலிலிருந்து**

# இளைய தலைமுறை – பெரியாரை எப்படிப் புரிந்து கொள்ள வேண்டும்?

பூபாலன்

***ஜா**தி ஒரு மன நோயாக பவுதீக உருவமின்றி இருக்கும்போது அந்த மனச்சூழலை எப்படித் தகர்க்க முடியும் என்ற கவலை அம்பேத்கருக்கு இருந்தது. பெரியார், ‘மனநோய்க்கு’ அடித்தளமான பவுதீகக் காரணிகளாக இருந்த கடவுள், மதம், சாஸ்திரம், புனிதங்களைக் கட்டுடைத்து, மக்களிடம் அதைக் கொண்டு செல்ல முடியும் என்று துணிவோடு களமிறங்கி தனது புரட்சியைத் தொடர்ந்தார் என்பதை சமூக அறிவியல் பார்வையில் விளக்குகிறது – இந்தக் கட்டுரை.*

‘பெரியார்’ என்ற ஒரு மனிதர் நம்மிடமிருந்து பௌதீகமாய் மறைந்துபோய் நாற்பத்தியாறு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில்; ‘தந்தை பெரியார்’ என்ற இந்தச் சொல் அளவிற்கு இந்த நூற்றாண்டின் தமிழ்நில அரசியல்தளத்தில் அதிகம் வசையிடப்பட்ட, கொண்டாடப்பட்ட ஒன்று இருக்க முடியாது. ‘பெரியார்’ என்று அரசியல் மிகைப்படுத்தும் ஈ.வெ.ராமசாமியின் பேச்சுக்களும் எழுத்துக்களும் வெற்றுக் கூப்பாடுகள் எந்தவொரு சிந்தனையுமற்ற அற்பங்கள். பார்ப்பனர், பார்ப்பனியம் என குறிப்பிட்டு, வெறுப்பரசியலை உருவாக்கி வெறும் பரப்புரையாகவே வீணாகிப் போனது அவரது வாழ்வு என்ற ஒரு தரப்பின் மேற்புரிதலில், வெறும் பரப்புரையாக அரசியல் தளத்தில் மட்டுமே, இன்று விவாதிக்கப்படும் பெரியாரை, அவரது சொற்களை; சிந்தனை தளத்திற்குள் உள்வாங்கி, இன்றைய தலைமுறைகள் எப்படி உரையாடத் துவங்குவது?

தன்மையில்; பெரியாரின் எழுத்துக்கள், சொற்கள் எதுவும் நுண் வாசிப்புத் தேடல் கொண்ட மனிதர்களுக்கானதல்ல. அது ஒரு பெருந்திரளை வாசிக்கச் சொல்லி, அதன் வழியாக சிந்தனைத்தளம் தாண்டிய சமூகச் செயல்பாடாக மாற வேண்டி பயன்விளைவு நோக்கியது.

மானுட வரலாற்றில் முதல்முறையாக, ஒரு மனிதன் தன்னளவில், தன் சமூகவெளிக்குள் தன் சுயத்தை உணர்ந்து கொள்ளாமல் இழிந்து கிடக்கும் நிலைமீட்சிக்கு “சுயமரியாதை இயக்கம்” (Self Respect Movement) என ஒரு சமூக இயக்கத்தை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற பெரியாரின் சிந்தனையே, இந்திய நிலப்பரப்பிற்குள் அதுவரை, தத்துவார்த்த தளத்தில் மட்டும் பேசப்பட்டு வந்த தனிமனித “சுயம்” (Self) என்ற ஓர் உணர்நிலையை; பெருந்திரள் மக்கள் வெளிக்குள் உரையாடும் நிலைக்கு கொண்டுவந்தது.

இங்கு மனிதன் மட்டுமல்ல, எந்தவொரு உயிரும் அதனளவில் தன் சுயத்தை உணராமல் இருக்கையிலேயே சுரண்டப்படுகிறது. தம் சுயம் வெட்டப்படுகையில் ஒவ்வொரு தனிமனிதனும், விலங்கு நிலைகொண்டு, அடிமை ஊழியத்திற்கு தள்ளப்பட்டு சுரண்டப்படுவான். ஒரு யானை குட்டியாய்க் கிடக்கையில் காலில் அழுத்திய சங்கிலியில் சிந்தனையை முடக்கி, ஆயுள் முழுக்க தன் பலமெனும் சுயத்தை மறந்து அடிமையாய்க் கிடக்கும் நிலை போல சமூகம் கிடந்தது.

இப்படியாக சகமனிதனை தன்பிறப்பின் அடிப்படையிலேயே சுயமிழக்கச்செய்வது சனாதன வர்ணாசிரமக் கட்டமைப்பு. இந்திய நிலப்பரப்பில் ஆன்மீகமாகத் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கும் ’வர்ணாசிரமம்’; உண்மையில், ஓர் அரசியலதிகார கட்டமைப்புக் கோட்பாடு (Authoritarian Political Ideology). எந்தவொரு அதிகாரக் கட்டமைப்பு கோட்பாடும் தன்னளவில், ஒரு தத்துவார்த்த பின்புலத்தை உருவாக்கிக்கொள்ளாமல் நிற்கமுடியாது. ஹிட்லரின் நாசிசத்துக்கு அடித்தளமாக ஆரிய மேட்டிமை பெருமிதம் இருந்தது போன்று, அனைத்து அதிகாரக் கட்டமைப்புக் கோட்பாடும் ஒரு தத்துவார்தத்தைத் தன் இருப்பிற்குக் கட்டமைத்துக் கொள்ளும்.

பெரியார் எதில் தனித்து நிற்கிறார்? வர்ணாஸ்ரமக் கட்டமைப்பு, ஒரு மனிதனின் சுயத்தை அழிக்கும் தத்துவத்தின்மேல் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. அது, அதிகாரக் கட்டமைப்பாக நிலைப்படுத்தப்பட்டிருக்கிறது பெரும்பான்மையான உழைக்கும் மானுடத்தின் அடையாளத்தை முற்றாக அழித்து நிற்கும் வர்ணாஸ்ரமக் கட்டமைப்பு, அதன் உச்சத்தில் பார்ப்பனர்களை நிறுத்தியிருக்கிறது. பார்ப்பனர்களுக்கு மனிதர்களை மீறிய, மானுட உயிரின் இயல்சுயத்துக்கு (Normal Self) அப்பாற்பட்ட ஒரு பெருமிதத்தை இந்தக் கட்டமைப்பு வழங்குகிறது. அடையாளங்களும் மரியாதையும் ஒரு பெரும் பகுதியினருக்கு மறுத்து, அழிக்கும் இதே கட்டமைப்பு, பார்ப்பனர்களுக்கு மட்டும் அதீதப் பெருமையை வழங்கும் முரண்பாடுகளை உள்ளடக்கியிருக்கும் இக் கட்டமைப்பில் அடங்கியுள்ள சமூகச் சுரண்டலையும் இந்த சமூகச் சுரண்டலின் வழியாகவே வர்ணாஸ்ரமக் கட்டமைப்பு, தன்னைத் தாக்குப் பிடித்துக் கொண்டு இயங்கிக் கொண்டிருக்கிறது என்ற உண்மையையும் புரிந்து கொண்டே ஒரே தலைவர் பெரியார் என்பதுதான், அவரது தனித்துவமான சிந்தனை.

“ஒரு தீண்டத்தகாதவனாக இருந்து கொண்டு இந்த நாட்டின் அடையமுடியா அனைத்து உயரங்களையும் அடைந்த பின்னும் சாதியக் கட்டமைப்பு, என்னை நடுக்கம் கொள்ளச் செய்கிறது என்கிறார் அம்பேத்கர். ஏனெனில் உலகம் முழுவதும் இருக்கும் அனைத்து சுரண்டல் சமூக அமைப்புகளும் ஒரு பௌதீகத்தன்மை கொண்டவை. இந்தியாவின் வர்ணாசிரம சுரண்டல் கட்டமைப்பு எந்த பௌதீக நிலையுமற்ற அரூப மனநிலையாக இருப்பதால், அதை நெருங்கி உடைக்கமுடியாமல் பயங்கரத் தன்மை கொண்டதாக இருக்கிறது” என்று தன் இறுதி நாட்களில் அம்பேத்கர் எழுதுகிறார்.

ஜாதி ஒரு மனநிலை - அதை எப்படி உடைக்கப் போகிறோம் என்ற அச்சம் அம்பேத்கருக்கு இருந்த நிலையில், அதை நெருங்கி உணர்ந்து அடித்து உடைக்கப்படக்கூடிய பௌதீகம் கொண்டவை என கண்டு கொண்டார் பெரியார். வர்ணாசிரம சுரண்டலின் வேர்; இந்த இரு வேறு துருவத் தன்னிலைகளின் (Contradictive Selves) மனக் கட்டமைப்பு என்பதை பெரியார் சிந்தித்ததாலே அந்த இரண்டையும் உடைக்க வேண்டிய செயற்பாட்டில் இறங்குகிறார். அதற்காக பொதுச் சமூகத்தைத் திரட்டுகிறார். எளிமையாகக் கூற வேண்டுமானால் ஒரு சமூகத்தை அடிமையாகவும் பார்ப்பனர்களை உயர் பெருமைக்குரியதாகவும், நிலைநாட்டிய வர்ணக் கட்டமைப்புக்கான வேர்களைத் தகர்த்தால், ஜாதிய மனநிலையைத் தகர்க்க முடியும் என்ற முடிவுக்கு வந்தார் பெரியார்.

ஒரு பார்ப்பனிய மனம், எதன் வழியாக தனக்கான உயர்ப் பெருமை என்ற மீயுணர்வு சுயத்தை அடைகிறது என்பதை பெரியார் ஆராய்கிறார். அது அவர்களின் வர்ணம் (நிறம்), பொதுவில் அறிந்து கொள்ள முடியாமல் அவர்களுக்குள்ளாகவே புழங்க வைக்கப்பட்டு, பொதுச் சமூக பயன்பாட்டிற்கு சென்றுவிடாமல் பொத்தி வைக்கப்பட்டிருந்த சமஸ்கிருத மொழி, வேத உச்சாடங்கள், ஸ்மிருதிகள், புராணக் கற்பனைகள், பொதுச் சமூகத்திலிருந்து தீண்டாமல் உள்ளடைவு செய்து கொள்ளும் தனித்த வாழ்வியல் செயற்பாடுகள் இதன் வழியாகவே ஒரு பார்ப்பனிய மனம், ஆதிக்கத்தையும் உயர்ச்சிப் பெருமையையும் பெற்று சுயத்தை அடைந்து தக்க வைத்துக் கொள்கிறது.

மாறாக, பார்ப்பனரல்லா பண்பாட்டு மனங்கள் மேற்சொன்ன அதே கூறுகளைக் கொண்டு, தங்கள் இயல்வாழ்நிலையின் அன்றாடங்களை, கலைகளை, படைப்புகளை, ஆன்மீக நம்பிக்கைகளை தாழ்ந்தவையாக்கிக்கொள்ளும் உணர்நிலை எய்தி, வீழ்ந்துபட்டு தங்கள் சுயத்தைப் பறிகொடுக்கின்றன.

இந்த மீயுணர்வு (Imperious), தாழ்நிலை (Inferior) என்ற முரண் சுயங்களை (Contradictive Selves), அவற்றை உணர்ந்து கொண்டுள்ள அந்தந்தத் தரப்பின் திரள் மனங்கள்(Collective Conscious) உணராத வரை, இந்திய நிலப்பரப்பின் இந்த வர்ணாசிரம சுரண்டல் கட்டமைப்பை தொடக்கூட முடியாது என பெரியார் கண்டறிந்தாலேயே, அந்த இரு முரண்சுயங்களையும் உடைத்தெரியும் சொற்களை பேசினார், எழுதினார்.

- உங்களுக்கு முன் முயற்சித்தவர்கள் செய்த தவறுகளையே நீங்களும் செய்து கொண்டிருந்தால், உங்கள் வாழ்நாளும் அவர்களைப் போலவே தவறு செய்யத்தான் முடியுமே ஒழிய, திருத்தம் காண முடியவே முடியாது. மலைக் காய்ச்சலால் அவதிப்படும் மக்கள் ‘கொய்னா’ சாப்பிடுவதையே அதற்குப் பரிகாரம் என்று கருதுவார்களானால், அம் மக்களுக்கு மருந்து சாப்பிடுகிற வேலையும், மருந்து வியாபாரிகளுக்கு இலாபம் கிடைக்கிற வேலையும் தான் நடைபெறுமே தவிர - அவர்களுக்கும் அவர்கள் சந்ததிகளுக்கும் மலைக் காய்ச்சல் ஏற்படுவது தடுக்கப்படமாட்டாது. (குடிஅரசு 13.1.1945)

- தோழர்களே! நான் ஏன் இப்படிச் சொல்லி வருகிறேன் என்றால், சாதி முறைகள் என்பவை எல்லாம் இந்து மதத்தினுடைய சிருஷ்டியே யாகும். இந்துக் கடவுள்கள் பெயராலும், சாஸ்திரங்கள் பெயராலுமேதான் அவை நிலை நிறுத்தப்படு கின்றன. பகுத்தறிவற்ற சில சமுதாய சீர்திருத்தக்காரர் என்பவர்கள் இப்படிப்பட்ட கடவுள், மத சாஸ்திரங் களுக்கும் இந்து மதத்திற்கும், வேதாந்தமும் தத்துவார்த்தமும் சொல்லி, இதை ஏற்படுத்தினவர் களுக்கு நல்ல பிள்ளைகளாக ஆவதற்கு முயற்சிப்பார்கள். இந்த அறிவீனமும் மோசமும் தந்திரமும் ஆன காரியங்களால் தாங்கள் மாத்திரம் மரியாதையடையலாமே தவிர, சமுதாயத்தின் இழிநிலைப் போக்க, ஒரு கடுகளவும் பயன்படாது.

  உண்மையில் மலைக் காய்ச்சலை ஒழிக்க வேண்டுமானால், மலைக் காய்ச்சலுக்கு ஆதாரமான, அதை உற்பத்தி செய்கிற கொசுப் பூச்சிகள், விஷக் காற்றுகள் முதலியவைகளை ஒழிக்க வேண்டும். இவை ஒழிக்கப்பட வேண்டுமானால், மறுபடியும் அவை உற்பத்தியாகா வண்ணம் கசுமாலங்களையும் குப்பை கூளங்களையும் நெருப்பு வைத்து எரித்து, அழுக்குத் தண்ணீர்க் குட்டைகளை மூடி ஆக வேண்டும். அதுபோலவே தான், நம் சமுதாய இழிவுக்குக் காரணங்களாய் இருக்கிற எப்படிப்பட்ட மதத்தையும், கடவுள்களையும், ஆதாரங்களையும் நாம் அடியோடு அறுத்தே தீரவேண்டியவர்களாய் இருக்கிறோம். (குடிஅரசு 18.1.1945)

- பார்ப்பனர்கள் தம்மைப் ‘பிராமணர்கள்’ என்று கூறிக் கொண்டு, ‘பிராமணாள் ஓட்டல்’ என்று போட்டுக் கெண்டு, நம்மைப் பஞ்சமன், சூத்திரன் என்ற வகுப்பில் குறிக்கும் ஹரிஜனன், நாயுடு, ரெட்டியார், முதலியார், பிள்ளை, ஆச்சாரி, செட்டியார், நாடார் முதலிய பெயர்களால் அழைத்தும், அழைத்துக் கொள்ளும்படி செய்தும் வருகிறார்கள். அதுதான், பதிவு (ரிஜிஸ்டர்) ஆகும். ஆதாரங்களில் அப்படிப் போட்டாக வேண்டும் என்று கட்டாயப் படுத்துகிறார்கள். இன்று நடப்பில் இருக்கும் சாதிக்கும், வகுப்புக்கும் இதுதான் தத்துவமாக இருந்து வருகிறது.

  பார்ப்பனர்கள், ‘பிராமணர்கள்’ ஆனால் பார்ப்பனர்கள் அல்லாத மற்ற ‘இந்து’க்கள் என்பவர்களாகிய நாம் யார்? சூத்திரர்கள் என்பதாகத் தானே நாமே ஒப்புக் கொண்டதாக ஆகி விடுகிறது.

  ஆதலால், பார்ப்பனர்களை நாம் பிராமணர்கள் என்று ஒப்புக் கொண்டதாகக் காட்டுவதோ நாம் அவர்களைப் பிராமணர்கள் என்று அழைப்பதோ, சொல்வதோ, ஆதாரங்களில் எழுதுவதோ ஆகிய காரியங்கள் நம்மை நாமே இழிவுபடுத்திக் கொள்வதாகவும், நமது கருத்துக்கும் - ஆசைக்கும் முரணாக நடந்ததாகவும் ஆகிறது - என்று பெரியார் சாதிய மனநிலைக்குள் புதைந்து கிடக்கும் பவுதீகக் காரணிகளை மக்கள் மன்றத்தில் போட்டுடைத்தார்.

(தொடரும்)

## பாலின குற்றங்களுக்கு எதிராக விழிப்புணர்வு பேரணி: தமிழ்நாடு மாணவர் கழகம் முடிவு

**செ**ன்னை, தமிழ்நாடு மாணவர் கழக ஆலோசனை கூட்டம், கழகத் தோழர் இரண்யா தலைமையில் 05.12.2021 அன்று மதியம் திவிக தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. நிகழ்வில் தொடரும் பாலியல் குற்றங்களுக்கு எதிராக விசாகா கமிட்டி பாலியல் கல்வி மற்றும் பாலின சமத்துவக் கல்வியை நடைமுறைப்படுத்த அனைத்து மாணவர் அமைப்பு மற்றும் முற்போக்கு அமைப்புகளை இணைத்து விழிப்புணர்வு பிரச்சாரத்திற்கான நடைபயணம் மேற்கொள்வது எனவும், பெருகி வரும் போதை மற்றும் மதுப்பழக்கங்களுக்கு மாணவர்கள் அடிமையாவதிலிருந்து விழிப்புணர்வு ஏற்படுத்தச் செய்வது, சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து தோழர்களையும் மாணவர்களையும் சந்தித்து மாணவர் கழக கட்டமைப்பை வலுப்படுத்துவது என்னும் முடிவு செய்யப்பட்டது.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# புரட்சியாளர் அம்பேத்கர் சிலைக்கு கழக சார்பில் மாலை அணிவிப்பு

அம்பேத்கர் நினைவு நாளையொட்டி, சென்னை மாவட்டக் கழகத்தின் சார்பில், 06.12.2021 அன்று காலை 9 மணியளவில் கழக பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில், அம்பேத்கர் மணிமண்டபத்தில் மாலை அணிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து மயிலாப்பூர் சுண்ணாம்பு கால்வாயில் அமைந்துள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. அடுத்து, இராயப்பேட்டை வி.எம்.தெரு பெரியார் படிப்பகத்தில் வைக்கப்பட்ட அம்பேத்கர் படத்திற்கு தலைமைக்குழு உறுப்பினர் அய்யனார் மாலை அணிவித்தார்.

தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், சென்னை மாவட்டத் தலைவர் வேழவேந்தன், மாவட்ட செயலாளர் உமாபதி, வட சென்னை யேசுகுமார், மயிலை சுகுமார், இராவணன், மனோகர் ஆகியோர் உட்பட சென்னை கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

**திருப்பூரில்** புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர் 65ஆவது நினைவு நாள் நிகழ்வு திருப்பூர் திராவிடர் விடுதலை கழகத்தின் சார்பில் கடைபிடிக்கப்பட்டது.

06.12.2021 அன்று காலை 10.00 மணியளவில் திருப்பூரில் அமைந்துள்ள புரட்சியாளரின் சிலைக்கு மாலை அணிவித்து கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டன. கழகத் தோழர்கள் நிர்வாகிகள் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் ஆற்றிய பணிகள், அடுத்து நம் முன் நிற்கும் சமூக கடமைகள் குறித்த செய்திகளை கூடியிருந்த தோழர்கள், மக்களிடையே எடுத்துக் கூறினர்.

இந்நிகழ்விற்கு கழகப் பொருளாளர் துரைசாமி தலைமை தாங்கினார் மாவட்ட தலைவர் முகில் ராசு முன்னிலை வகித்தார்.

கழகப் பொறுப்பாளர்கள் சங்கீதா, தனபால், ஐயப்பன், மாதவன், மாணவர் கழக சந்தோஷ், பிரசாந்த் பரிமளராஜன் தனகோபால், மாரிமுத்து, முருகவேல், கீதா மணி, கார்த்திக், பெரியார் பிஞ்சு யாழிசை உள்ளிட்ட தோழர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

**மேட்டூரில் :** 06.12.2021 திங்கள் காலை 10.00 மணியளவில், புரட்சியாளர் அம்பேத்கர் நினைவு நாளில் மேட்டூர் அச்சங்காடு பகுதியில் உள்ள அம்பேத்கர் உருவச் சிலைக்கு திராவிடர் விடுதலைக் கழகத் தலைமைக் குழு உறுப்பினர் அ.சக்திவேல் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. மேட்டூர், மேட்டூர் RS பகுதி தோழர்கள் கலந்து கொண்டனர்.

**கோவை :** காந்திபுரம் பெரியார் சிலை முன்பு அம்பேத்கர் படத்திற்கு கழகத் தோழர் சுரேஷ் தலைமையில் மாலையிட்டு கொள்கை முழக்கங்கள் எழுப்பி வீரவணக்கம் செலுத்தப்பட்டது.

கலந்து கொண்ட தோழர்கள் : மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன், சுரேஷ், நேருதாசு, நிர்மல்குமார், வெங்கட், மாதவன்சங்கர், கிருஷ்ணன், இராஜாமணி, புரட்சித்தமிழன், ரத்தினபுரி சதீஷ், இயல், எழிலரசன். தோழர்கள் அனைவருக்கும் புரட்சித் தமிழன் தேநீர் வழங்கினார்.

*முன் பதிவுத் திட்டத்தின் கீழ் பதிவு செய்யலாம்*

## 20 ஆண்டு 'புரட்சிப் பெரியார் முழக்க'த் தலையங்கங்கள், 5 தொகுப்புகளாக வெளி வருகிறது

2001லிருந்து 2020 வரை 'புரட்சிப் பெரியார் முழக்கம்' ஏட்டில் வந்த தலையங்கங்கள்; கோடங்குடி மாரிமுத்து என்ற புனைப் பெயரில் விடுதலை இராசேந்திரன் எழுதிய 'நய்யாண்டி எழுத்துகள்' அடங்கிய 5 தொகுப்புகள் விரைவில் வெளிவர இருக்கின்றன. மொத்தம் ரூ.800/- விலையுள்ள இத்தொகுப்புகள் முன் வெளியீட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.600/-க்கு கிடைக்கும்.

முன்பதிவுக்கு தொடர்பு எண் :
மனோஜ் : 73736 84049
விஜயகுமார் : 98416 53200

(முதல் பக்கத் தொடர்ச்சி)

சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரத்தை மறுப்பது அனைத்துமே பார்ப்பனியம் தான் என்றார்.

இப்போது நமக்கு பெரியார், அம்பேத்கர், மார்க்ஸ் என்ற மூன்று சித்தாந்தங்களும் தேவைப்படு கிறது.

இன்றைக்கு இந்தியாவிலேயே இந்துத்துவாவை எதிர்க்கக் கூடிய ஒரே வலிமையான தலைவர் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தான். அதற்கான கருத்தியல்களை கூர்மையுடன் இத்தகைய நூல்களும் பெரியாரிய கொள்கைகளும் அதை முன்னெடுக்கும் இயக்கங்களும் தலைவர்களும் வழங்கி வருகின்றனர்.

மு.க. ஸ்டாலின் பற்றி கலைஞர் குறிப்பிடும்போது, உழைப்பு, உழைப்பு! இது தான் ஸ்டாலின் என்று கூறினார். ஒரு இயக்கத்துக்கான சிறந்த தலைவர் என்பதை சுட்டிக் காட்டினார். இப்போது இந்தியாவின் வரலாறு தமிழ் நாட்டிலிருந்து தான் தொடங்கப்பட வேண்டும் என்று நமது முதல்வர் அறிவித்து, திராவிட இயக்கத் தின் தத்துவத் தலைவராக உயர்ந்து நிற்கிறார் தமிழக முதல்வர், என்றார் ஆ. ராசா.

விழாவில் கருஞ்சட்டைப் பதிப்பகப் பொறுப்பாளர் பெல் ராசன் வரவேற்புரையாற்றினார். ப. திருமாவேலன், பேராசிரியர் ஜெயரஞ்சன் உரையாற்றியதைத் தொடர்ந்து, பேராசிரியர் சுப. வீரபாண்டியன் ஏற்புரை நிகழ்த்தினார். மூன்று நூல்களும் 300 பிரதிகள் மேடையிலே விற்றன. ஆ.ராசா விடமிருந்து நீண்ட வரிசையில் நின்று நூல்களைப் பெற்றுக் கொண்டனர்.

பார்வையாளர்களாக மாநிலங்களவை உறுப்பினர் எம். சண்முகம், மயிலை சட்டமன்ற உறுப்பினர் வேலு, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் மற்றும் கழகத் தோழர்கள், ஆதி திராவிடர் பழங்குடியினர் நல வாரிய துணைத் தலைவர் புனித பாண்டியன் ஆகியோரும் பங்கேற்றனர். அரங்கம் நிரம்பி வழிந்தது.

**செய்தி : 'இரா'**

# கழகப் பொறுப்பாளர்கள் மூன்றாம் கட்ட பயணம்: கழக ஏட்டுக்கு சந்தா சேர்ப்பதில் தோழர்கள் ஆர்வம்

மூன்றாம் கட்ட பயணமாக 1, 2, 3.12.2021 ஆகிய தேதிகளில் கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி பரப்புரைச் செயலாளர் பிரபாகரன் தலைமைக் குழு உறுப்பினர் விழுப்புரம் அய்யனார் ஆகியோர் மாவட்ட கழகப் பொறுப்பாளர்கள் மற்றும் தோழர்களிடத்தில் கலந்துரையாடினர்.

தர்மபுரியில் 1.12.2021 அன்று காலை 11 மணி அளவில் பி அக்கரகாரம் நஞ்சப்பன் இல்லத்தில் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது கூட்டத்தில் மாவட்ட பொறுப்பாளர்கள் வேணுகோபால், சந்தோஷ்,பரமசிவம் உள்பட பல பகுதிகளில் இருந்து தோழர்கள் பங்கேற்றனர் கழக செயல்பாடுகள் மற்றும் அரசு செயல்பாடுகள் குறித்த தகவல்களை தெரிந்துகொள்ள புரட்சிப்பெரியார் முழக்கம் பெரும் உதவியாக இருந்தது என்றும், இந்த ஆண்டு கூடுதல் சந்தா சேர்ப்போம் என்றும் தோழர்கள் கூறினர்.

இதனைத் தொடர்ந்து மாலை 4 மணியளவில் கிருஷ்ணகிரி மாவட்டம் சிகர்ந்தப்பள்ளி மாவட்டச் செயலாளர் குமார் இல்லத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது. மாவட்ட பொறுப்பாளர்கள் ப.வாஞ்சிநாதன், குமார், கிருஷ்ணன் உள்பட 35 தோழர்கள் கூட்டத்தில் பங்கேற்றனர் மாவட்ட கழக சார்பில் 500 சந்தா சேர்த்து தருவதாகவும் ஒவ்வொரு மாதமும் கிராம பிரச்சாரங்களை மேற்கொள்வதாக தலைமைக் கழகம் ஒப்புதல் கொடுத்தால் மண்டல மாநாடு ஓசூரில் நடத்துவதாகவும் உறுதியளித்தனர். இரவு உணவு மற்றும் பயணக் குழுவினர் தங்குவதற்கு மாவட்ட தலைவர் ப. வாஞ்சிநாதன் ஏற்பாடு செய்தார்.

2.12.2021 அன்று காலை 11 மணி அளவில் ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டக் கழகத் தோழர்கள் சந்திப்பு பள்ளிகொண்டாவில் சாதி ஒழிப்பு போராளி கிருஷ்ணசாமி நினைவு கட்டிடத்தில் நடைபெற்றது. மாவட்ட பொறுப்பாளர்கள் இராமலை வழக்கறிஞர் அ.ப.சிவா ஆகியோர் உட்பட தோழர்கள் பலர் பங்கேற்றனர். கூட்டத்தில் கடந்த கால இயக்க செயல்பாடுகள் குறித்தும் அடுத்த கட்ட இயக்க செயல்பாடுகள் மற்றும் கழக ஏட்டிற்கு சந்தா சேர்த்தல் குறித்தும் பேசப்பட்டது. தோழர்களுக்கு மதிய உணவு வழக்கறிஞர் சிவா ஏற்பாடு செய்தார்

தொடர்ந்து மாலை 6 மணி அளவில் கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் வாசுகி திருமண மண்டபத்தில் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. மாவட்டக் கழக பொறுப்பாளர்கள் ராமன் மதியழகன் சாமிதுரை நாகராஜ் முருகன் உள்பட பல பகுதிகளிலிருந்தும் தோழர்கள் திரளாக பங்கேற்றனர். கூட்டத்தில் பல அரசியல் நிகழ்வுகள் குறித்து விரிவாக பேசப்பட்டது. பெரியாரின் ஜாதி ஒழிப்புக் போராட்டங்களையும் சமூகநீதி போராட்டங்களையும் தொடர்ந்து மக்களிடத்தில் பரப்புரை செய்வோம் என்றும் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு கூடுதல் சந்தா சேர்ப்பதாகவும் முதலில் தோழர்கள் சந்தாதாரராக ஆக்குவோம் என்றும் உறுதியளித்தனர். கூட்டத்தில் புதிய ஒன்றிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். சங்கராபுரம் ஒன்றிய அமைப்பாளராக அன்பு, ரிஷிவந்தியம் ஒன்றிய தலைவராக மா.குமார், ஒன்றிய செயலாளராக துரைராஜா, ஒன்றிய அமைப்பாளராக கார்மேகம் தொடர்ந்து நீடிப்பார் என்றும் அறிவிக்கப்பட்டது. தோழர்களுக்கு இரவு உணவு மாவட்ட கழக பொறுப்பாளர்கள் ஏற்பாடு செய்தனர். பயணக் குழுவினர் இரவு தங்குவதற்கு தோழர் சல்லை சி.ஆசைத்தம்பி ஏற்பாடு செய்தார்.

3.12.2001 அன்று காலை 11 மணியளவில் விழுப்புரம் மாவட்டம் அரியலூரில் கே.வி.இராசன் இல்லத்தில் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. மாவட்டக் கழக பொறுப்பாளர்கள் இளையரசன் பெரியார் சாக்ரடீஸ், விஜயன், விஜி, ஜெயரட்சகன் உள்ளிட்ட தோழர்கள் பலர் பங்கேற்றனர். இக்கூட்டத்தில் புதிய தோழர்கள் மூன்று பேர் கழகத்தில் இணைந்தனர். கழக ஏட்டுக்கு கூடுதல் சந்தா சேர்த்தல் மற்றும் கிராம பிரசாரங்களை முன்னெடுப்பது குறித்தும் பேசப்பட்டது. தோழர்களுக்கு மதிய உணவு மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் ஏற்பாடு செய்தனர் மூன்றாம் கட்ட பயணம் நிறைவுற்றது.

**செய்தி: அய்யனார்**

## 2022 - நாட்காட்டி விற்பனைக்குத் தயார்

**சமூக நீதித் தலைவர்களின் படங்கள் நாட்காட்டியை அலங்கரிக்கின்றன.**

**நாட்காட்டி ஒன்றின் விலை : ரூ.50/-**

**முன் பதிவு செய்பவர்களுக்கு மட்டுமே நாட்காட்டி கிடைக்கும்.**

**தொடர்புக்கு:**
**தபசி குமரன்,**
**தலைமை நிலையச் செயலாளர். :**
(9941759641)




Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 09th December 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN